Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 415/ 2025 Date:20.05.2026
Deposition of witness for prosecution: PW 1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | நிதர்ஷா | Village | ஓடைப்பட்டி |
| Father/ Husband Name | பொம்முராஜ் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 31/26 | Calling | - --- |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2026 TIME 12.20 **PM**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். கடந்த 22.01.2019–ம் தேதியன்று எனது நாத்தனாரின் மகள் ரவீனா ராணிக்கு திருமண நிச்சியதார்த்தம் நடந்தது. 2–வது எதிரியான வசந்த் ரவீனாராணியை ஒருதலை காதல் செய்து வந்துள்ளார். எங்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காக 2 வது எதிரியும், அவரது நண்பரான 1–வது எதிரியும் கூட்டு சேர்ந்து, எனது வாட்ச்அப்பில் இருந்த எனது Profile photo வை எடுத்து ஆபசாமாக சித்தரித்து, ரவீனாராணிக்கு நிச்சியக்கப்பட்டுயிருந்த மணமகனுக்கு அனுப்பியுள்ளார். அதனை அவர் என்னிடம் காண்பித்து விசாரித்தார். இதனால் நானும், எனது கணவரும் 1–வது எதிரியிடம் விசாரித்த போது, தேவிடியா போன்ற அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்து, ஆபசமாக பேசி, கொலைமிரட்டல் விடுத்தார். இது குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். புகார் அசா.ஆ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 11–ம் வகுப்பு படித்துள்ளேன். சாட்சி பொம்முராஜ் எனது கணவர் என்றால் சரிதான். சாட்சி ரவீனாராணி எனது கணவரின் அக்கா மகள் என்றால் சரிதான். சாட்சி ராகவன் எனது கணவரின் மாமா என்றால் சரிதான். சாட்சி சுகந்தி ராணி எனது கணவரின் அக்கா என்றால் சரிதான். சாட்சி கிருஷ்ணமூர்த்தி எனது சித்தப்பா என்றால் சரிதான். சாட்சி சேகர் ஜாதிசங்க தலைவர் என்றால் சரிதான். புகார் அளித்த தேதி தற்போது ஞாபகமில்லை. சம்பவத்திற்கு முன்பு எனது செல்போன் காணாமலோ, திருடோ ஆகவில்லை என்றால் சரிதான். நாங்களும், எதிரிகளும் ஒரே சாதியை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது செல்போனை நான் தான் பயன்படுத்த இயலும் என்றால் சரிதான். இவ்வழக்கு முன்பாக எனக்கும், எதிரிகளுக்கும் இடையே நேரடியாகவோ, செல்போன் மூலமாகவோ தொடர்பு இல்லை என்றால் சரிதான்.

2) சம்பவ சமயத்தில் நான் நந்தகோபால் தெருவில் குடியிந்தேன். எதிரிகள் வேறு தெருவில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். 1–வது எதிரியின்

வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ தொலைவு என்றால் சரிதான். 1–வது எதிரி எனக்கு அண்ணன் முறை என்றால் தெரியாது. சாட்சி சுகந்திராணியின் வீடு எனது வீட்டில் இருந்து சுமார் 1 கி.மீ தொலைவு என்றால் சரிதான். சாட்சி ரவீனாராணி திண்டுக்கல்லில் உள்ள PSNA கல்லூரியில் படித்தார் என்றால் சரிதான். அவ்வாறு கல்லூரியில் படித்து கொண்டிருந்த போது 2–வது எதிரி அண்ணா பல்கலைக்கழக்கத்தில் படித்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. சாட்சி ரவீனா ராணியும், 2–வது எதிரியும் 5 வருடங்களாக மனஒருமித்து காதலித்து வந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது.

3) எனது செல்போனை எனது கணவர் மற்றும் குழந்தைகள் பயன்படுத்த வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ரவீனாராணியும், 2–வது எதிரியும் ஒருவரை ஒருவர் மனமுவந்து காதலித்து வந்ததை பிரித்தால் ரவீனாராணி தான் எனது புகைப்படத்தை ஆபசமாக சித்தரித்தார் என்ற விபரம் தெரிந்தும், பழிவாங்கும் நோக்கில் எதிரிகள் செய்ததாக பொய் புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள். சம்பவ சமயத்தில் 2–வது எதிரி திருப்பூரில் வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி தெரியாது. எதிரிகள் தான் என்னை ஆபசமாக சித்தரித்தார்கள் என்ற ஆவணம் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். புகார் அளித்த பிறகு எத்தனை முறை என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் இரண்டுமுறை விசாரித்தார்கள், தேதி ஞாபகமில்லை. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 415/ 2025 Date:20.05.2026
Deposition of witness for prosecution: PW 2 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | பொம்முராஜ் | Village | ஓடைப்பட்டி |
| Father/ Husband Name | வீரபொம்மு | Taluk | உத்தமபாளையம் |
| Age | 44/26 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2026 TIME 12.40 **PM**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

அ.சா.1 எனது மனைவி ஆவார். தேதி ஞாபகமில்லை. சுமார் 8 வருடத்திற்கு முன்பாக 2–வது எதிரி, எனது அக்கா மகள் ரவீனாராணி என்பவரை காதலிப்பதாக பிரச்சனை செய்தார். நாங்கள் தகராறு செய்ய வேண்டாம் என எச்சரித்து அனுப்பி வைத்தோம். 2–வது எதிரியும் சென்றுவிட்டார். பின்னர் அ.சா.1 ஆகிய எனது மனைவியின் வாட்ச் அப்பில் இருந்த Profile photo வை ஆபசமாக சித்தரித்து, வெளியிடப்பட்டது. நாங்கள் இது சம்மந்தமாக Cyber Crime ல் புகார் அளித்து, பார்த்த போது, சூரிய குமார் என 1–வது எதிரியின் பெயர் வந்தது, அச்சமயத்தில் 2–வது எதிரி வெளியூர் சென்றுவிட்டார். பின்னர் இதுசம்மந்தமாக போலிசில் புகார் அளித்தோம். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சாட்சி கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சி ரவீனா ராணியும், 2–வது எதிரியும் 5 வருடங்களாக மனஒருமித்து காதலித்து வந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது மனைவியின் வாட்ச்அப்பில் இருந்த Profile photo வை ஆபசமாக சித்தரித்து சமூக வலைத்தலத்தில் அனுப்பிய தேதி என்னவென்றால் ஞாபகமில்லை. எனது மனைவியின் செல்போனை அவர்மட்டும் தான் பயன்படுத்த இயலும் என்றால் அவரும், எங்களது வீட்டில் உள்ளவர்களும் பயன்படுத்த இயலும். 3–ம் நபர்கள் பயன்படுத்த இயலுமா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பாக எனது மனைவியின் செல்போன் காணாமலோ, திருடோ போகவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த சமயத்தில் 2–வது எதிரி வெளியூரில் இருந்தார் என்றால் சரிதான். 2–வது எதிரி, சாட்சி ரவீனாராணியும் ஒருவரை ஒருவர் காதலித்து வந்த விபரம் அனைவருக்கும் தெரியும் என்றால் இல்லை.

2–வது எதிரி மற்றும் சாட்சி ரவீனா ராணி காதல் சம்மந்தமாக ஜாதி சங்கத்தில் ரவீனா ராணியின் அம்மா சுகந்தி ராணியால் புகார் அளிக்கப்பட்டது

என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எங்களது வீட்டில் பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் இல்லை. எனது மனைவி புகார் அளித்த தேதி தற்போது ஞாபகமில்லை. Cyber Crime ல் புகார் அளிக்கப்பட்ட விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். ரவீனாராணிக்கு நடைபெற்ற நிச்சியதார்த்த தேதி போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். ரவீனாராணியும், 2–வது எதிரியும் ஒருவரை ஒருவர் மனமுவந்து காதலித்து வந்ததை பிரித்ததால் ரவீனாராணி தான் எனது மனைவியின் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்தார் என்ற விபரம் தெரிந்தும், பழிவாங்கும் நோக்கில் எதிரிகள் செய்ததாக அளிக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 415/ 2025 Date:20.05.2026
Deposition of witness for prosecution: PW3 ( LW 4)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ராகவன் | Village | ஓடைப்பட்டி |
| Father/ Husband Name | ராமர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 62/26 | Calling | கடை |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2026 TIME 1.00 **PM**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

அ.சா.2 எனது மனைவியின் சகோதரர். அ.சா.1, அசா.2 ன் மனைவி. எனது மகள் ரவீனாராணி திண்டுக்கல்லில் உள்ள PSNA கல்லூரியில் படித்து முடித்துவிட்டு மதுரையில் வேலை செய்து வந்தார். எனது மகள் ரவீனாராணிக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்த போது, எனது மகள் 2–வது எதிரியை காதலிப்பதாக சொன்னார். நாங்கள் சரிப்பட்டு வராது என புத்திமதி சொல்லியதால் அவர் திருமணத்திற்கு ஒப்புக்கொண்டார். பின்னர் எனது மகள் ரவீனாராணிக்கும், வேறு ஒரு மாப்பிள்ளைக்கும் திருமணம் நிச்சியக்கப்பட்டது. 2–வது எதிரி பல்வேறு வகைகளில் துன்பம் கொடுத்து வந்தார். பின்னர் எனது மைத்துனரின் மனைவியை ஆபசமாக பேசியுள்ளார். அது பற்றி அவர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களிடம் தேனியில் புகார் அளித்தார். பின்னர் ஓடைப்பட்டி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 க்கு என்ன நடந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் கேள்விப்பட்டேன் என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 புகார் அளித்த தேதி ஞாபகமில்லை. 2–வது எதிரியும், எனது மகள் ரவீனா ராணியும் காதலித்த விபரம் எனக்கு தெரியும் என்றால் எனது மகளின் திருமண நிச்சியதார்த்ததிற்கு 1 மாதம் முன்பு தெரியும். அ.சா.1, 2 ஆகியோர்களுக்கும், ரவீனாராணியும் 2–வது எதிரியும், காதலித்த விபரம் தெரியும் என்றால் அவர்களுக்கு தெரியாது. எனது மகள் ரவீனாராணி தான் அ.சா.1 ன் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து சமூக வலைத்தலத்தில் பழிவாங்கும் நோக்கில் எதிரிகள் செய்ததாக அசா.1 அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 415/ 2025 Date:20.05.2026
Deposition of witness for prosecution: PW4 ( LW 5)
Defence:
Court:

| Name | சுகந்திராணி | Village | ஓடைப்பட்டி |
|---|---|---|---|
| Father/ Husband Name | ராகவன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 46 /26 | Calling | ---- |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 20.05.2026 TIME 1.20 **PM**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

அ.சா.3 எனது கணவர். அ.சா.2 எனது சகோதரர். அ.சா.1, அசா.2 ன் மனைவி. எனது மகள் ரவீனாராணி திண்டுக்கல்லில் உள்ள PSNA கல்லூரியில் படித்து முடித்துவிட்டு மதுரையில் வேலை செய்து வந்தார். 2-வது எதிரி, எங்களது மகள் ரவீனாராணியை பொய் சொல்லி காதலித்து வந்துள்ளார். பின்னர் உண்மை தெரிந்ததால் எனது மகள் வேறு மாப்பிள்ளை திருமணம் செய்து கொள்வதாக சொன்னார். அதன் அடிப்படையில் திருமணம் ஏற்பாடுகளை செய்தோம். ஆனால் 2-வது எதிரி பல்வேறு வகைகளில் துன்புறுத்தி வந்தார். அதன் பின்னர் அ.சா.1 ன் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து, எதிரிகள் வெளியிட்டனர். இதுகுறித்து அ.சா.1 புகார் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2-வது எதிரியும், ரவீனாராணியும் காதலித்தார்கள் என்றால் சரிதான். அவர்களது காதலை பிரிப்பத்தற்காக ஜாதி சங்கத்தில் மனு கொடுத்தேன் என்றால் இல்லை. 2-வது எதிரியை விட நாங்கள் வசதியான குடும்பம் என்றால் சரிதான். 2-வது எதிரிக்கு வசதி குறைவு என்பதால் தான் அவர்களது காதலை ஏற்கவில்லை என்றால் சரியல்ல. எனது மகள் ரவீனாராணி தான் அ.சா.1 ன் புகைப்படத்தை ஆபாசமாக சித்தரித்து சமூக வலைத்தலத்தில் பழிவாங்கும் நோக்கில் பதிவிட்டதை எதிரிகள் செய்ததாக அசா.1 அளித்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2-வது எதிரி பல்வேறு விதங்களில் துன்புறுத்தியது குறித்து ஓடைப்பட்டி காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. அ.சா.1 ன் புகைப்படம் ஆபசமாக சித்தரிக்கப்பட்ட மற்றும் அ.சா.1 அளித்த புகார் ஆகியவற்றின் தேதி என்னவென்றால் 2019-வருடம் தேதி ஞாபகமில்லை. அ.சா.1 இதுசம்மந்தமாக தேனி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளித்தார் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

SD/P.Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.